வளர் தமிழ்

வாசிப்போம்



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

வளர் தமிழ்

1 2 3 4

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

நூலமைவு விளக்கம்

நூற்பெயர் : வளர் தமிழ் 1,2,3,4 வாசிப்போம்

நூலாக்கம் : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

பக்கங்கள் : 136

நூல் வடிவமைப்பு : செ.சுஜீகரன்

செய்திட்ட நிறைவேற்றுநர் : நகுலேசுவரி அரியரத்தினம்

பதிப்புரிமை : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

முதற்பதிப்பு : 2015

Published by :
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
1st published 2015

Printed in France

முன்னுரை

வாசிப்பதால் மாந்தன் முழுமையடைகின்றான்.

இப்பொன்மொழிக்கு இணங்க மொழியின் ஒரு கூறான வாசிக்கும் ஆற்றலை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் இந்நூல் வெளியிடப்படுகிறது. புலம்பெயர் தேசத்தில் மலர்ந்த எம் சிறார்கள் தமது தாய்மொழியான தமிழைக் கற்பதற்கும் அதன் சுவையை அறிவதற்கும் தமது இன அடையாளங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்வதற்கும் வாசிக்கும் ஆற்றல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டே மழலைகள் முதல் பெரியோர் வரை தங்கள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை இந்நூலை அணியஞ் செய்துள்ளது. வாசிக்கும் போது எழுத்துகளைக்கூட்டிச் சொற்களைப் பலுக்கி எளிதாக வாசிக்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அறிவியல் சார்ந்த பல செய்திகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. வெறுமனே வாசிப்புப் பகுதியாக மட்டும் அமையாது வாசிப்போர் மனதில் நற்கருத்துகளை நிலை நிறுத்தும் அறிவுப் பெட்டகமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. சிறுவர் முதல் பெரியோர்வரை இந்நூலை வாசித்துப் பயன்பெறலாம்.

எங்கே ஒரு நூல்நிலையம் திறக்கப்படுகின்றதோ

அங்கே ஒரு சிறைக்கூடம் மூடப்படும்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழே எங்கள் உயிர்

உள்நிரல்

வாசிப்போம்

தமிழே எங்கள் உயிர்

வளர் தமிழ் 1

வாசிப்போம்

வாசிப்போம்



- செண்பகம்
- அவர் முதியவர்.
- தவளை தத்தும்.
- கொக்கு வெள்ளை நிறம்.
- கப்பல் கடலில் செல்கின்றது.

வாசிப்போம்



- அறுசுவை
- சிறிய எறும்பு.
- குயில் கூவுகின்றது.
- தங்கை கயிறு அடிக்கின்றாள்.
- தாமரைப்பூ அழகாக மலர்ந்தது.

வாசிப்போம்



- கடல்
- மழை பெய்கிறது.
- பாகற்காய் கசக்கும்.
- பனை உயரமான மரம்.
- அம்மா குத்துவிளக்கு ஏற்றினார்.

வாசிப்போம்



- ஓவியம்
- அழகான தோடுகள்.
- பெரிய காவிருக்கை.
- ஔவையார் தமிழ்ப் புலவர்.
- நாங்கள் பூமாலை கட்டுவோம்.

வாசிப்போம்



- எழுதுபலகை
- அவன் வீரன்.
- கரும்பு இனிக்கும்.
- அக்கா அஞ்சல் எழுதுகின்றார்.
- ஆடிக்கூழ் காய்ச்சிக் குடிப்போம்.

வாசிப்போம்



- தோகை
- மயில் அகவும்.
- ஆறு ஓடுகின்றது.
- தம்பி பந்து அடிக்கின்றான்.
- ஆசிரியர் வகுப்புக்கு வந்தார்.

வாசிப்போம்



- நூலகம்
- சிறிய பானை.
- பாடம் கற்போம்.
- கரடி காட்டில் வாழும்.
- நாவரசி நடனம் ஆடினாள்.

வாசிப்போம்



- விண்மீன்
- நறுமணம் வீசுகின்றது.
- செவ்வரத்தம்பூ பூத்தது.
- பெரியவர் வீட்டிற்கு வந்தார்.
- அப்பா மரத்தை வெட்டினார்.



வாசிப்போம்

- விண்ணுந்து
- பாம்பு சீறும்.
- ஆ பால் தரும்.
- தம்பி கடலில் நீந்துகின்றான்.
- எழிலன் சடுகுடு விளையாடினான்.

வாசிப்போம்



- ஆடிப்பிறப்பு
- உண்மை பேசுவோம்.
- காலையில் எழுவோம்.
- சங்கிலியன் ஒரு மன்னன்.
- தங்கை பள்ளிக்குச் சென்றாள்.

வாசிப்போம்



- பலாப்பழம்
- அழகான வயல்.
- பெரியோரை மதிப்போம்.
- எலி வளையில் வாழும்.
- சேந்தன் பாட்டுப் பாடுகிறான்.



வாசிப்போம்

- வணக்கம்
- பெரிய தட்டம்.
- மயில் ஆடுகிறது.
- சேவல் காலையில் கூவும்.
- மான் விரைவாக ஓடுகிறது.

வாசிப்போம்



- தமிழீழம்
- காகம் கரையும்.
- கிளி பச்சை நிறம்.
- மாம்பழம் இனிக்கும்.
- அண்ணா மரத்தில் ஏறுகின்றார்.

வாசிப்போம்



- சாளரம்
- பெரிய நகரம்.
- பம்பரம் விடுகிறான்.
- அம்மா அன்பாக இருப்பார்.
- வல்லூறு வானத்தில் பறக்கிறது.



வாசிப்போம்

- கார்த்திகைப்பூ
- வட்டமான மேசை.
- மழை பெய்கின்றது.
- வேணி நடனம் ஆடினாள்.
- அப்பம் சுவையாக இருக்கின்றது.

வாசிப்போம்



- நுங்கு
- நீளமான வழி.
- சிங்கம் முழங்கும்.
- கோயில் மணி ஒலிக்கிறது.
- அக்கா கவிதை வாசிக்கிறார்.

வாசிப்போம்



- பேச்சாளர்
- பாகற்காய் கசக்கும்.
- மின்னல் மின்னுகிறது.
- மாமா கூழ் குடிக்கின்றார்.
- வேடர்கள் காட்டில் வாழ்கின்றனர்.



வாசிப்போம்

- தொலைபேசி
- தேர்த் திருவிழா.
- மிளகாய் உறைக்கும்.
- மாடு புல் மேய்கிறது.
- பார்கவி ஊஞ்சல் ஆடுகிறாள்.

வாசிப்போம்



- வானொலி
- பூ மலர்ந்தது.
- ஆறுவது சினம்.
- அம்மா வடை சுடுகின்றார்.
- சேந்தன் மத்தளம் வாசிக்கின்றான்.

வாசிப்போம்



- தென்னோலை
- குரங்கு தாவுகிறது.
- ஒட்டகச்சிவிங்கி உயரமானது.
- அணில் பழம் கொறிக்கிறது.
- ஆமைகள் குளத்தில் வாழும்.

வாசிப்போம்



- நெல்லிக்கனி
- விண்கலம் புறப்பட்டது.
- பாக்குத் துவர்க்கும்.
- மாமா ஏணியில் ஏறுகிறார்.
- குருவி கூட்டில் வாழ்கிறது.

வாசிப்போம்



- மருத்துவர்
- தக்காளிச் செடி.
- ஆந்தை அலறும்.
- காற்று மெல்ல வீசுகின்றது.
- நெல் அறுவடை செய்தனர்.

வாசிப்போம்



- அம்மா
- பட்டம் விடுவோம்.
- உயரமான தென்னை.
- மஞ்சள் நிறச் சட்டை.
- பூனை எலியைப் பிடித்தது.

வாசிப்போம்



- விளாம்பழம்
- பறவை பறக்கின்றது.
- குழலி விளையாடுகின்றாள்.
- வானவில் அழகாக இருக்கும்.
- அம்மா கோலம் போடுகின்றார்.

வாசிப்போம்



- சலங்கை
- தமிழ் படிப்போம்.
- நத்தை ஊருகின்றது.
- செவ்வந்திப்பூ மஞ்சள் நிறம்.
- மரங்கொத்தி மரத்தைக் கொத்துகிறது.

வாசிப்போம்



- கவசம்
- ஆ மேய்கிறது.
- நாய் குரைக்கின்றது.
- வானம் நீல நிறம்.
- அப்பா கடைக்குச் சென்றார்.

வாசிப்போம்



- கம்பளம்
- இலைகள் விழுந்தன.
- காவியா ஆடுகின்றாள்.
- சிங்கம் பாய்ந்து ஓடியது.
- வண்டு பூவில் இருக்கின்றது.

வாசிப்போம்



- புலி
- கிளி பேசும்.
- மாங்காய் புளிக்கும்.
- காட்டில் மரங்கள் நிற்கின்றன.
- பெற்றோர் சொல்லைக் கேட்போம்.



வாசிப்போம்

- தேனீக்கள்
- மாமா வருவார்.
- அன்பாய் இருப்போம்.
- அறம் செய்ய விரும்பு.
- இனியா வீணை மீட்டுகின்றாள்.

வாசிப்போம்



- சங்கு
- வெள்ளம் பாய்கின்றது.
- தொடருந்து செல்கின்றது.
- பாட்டி கதை சொன்னார்.
- கதிரவன் ஒளியைத் தருகின்றான்.

வாசிப்போம்



- சிற்றுந்து
- பூனை கத்தும்.
- வெய்யில் எறிக்கின்றது.
- பருந்து உயரப் பறக்கும்.
- கடலில் அலை அடிக்கின்றது.

வளர் தமிழ் 2

வாசிப்போம்

வாசிப்போம்



- தமிழ் இனிமையானது.
- கோழி முட்டை இட்டது.
- நீருந்து கடலில் செல்கிறது.
- வேடன் புறாவுக்கு வலை விரித்தான்.
- சிறுவனும் சிறுமியும் ஊஞ்சல் ஆடுகின்றனர்.

வாசிப்போம்



- மணல்வீடு கட்டுவோம்.
- மாணவர் நாடகம் நடித்தனர்.
- செடிகள் தோட்டத்தில் நிற்கின்றன.
- மாறன் நேற்றுத் தேர்வு எழுதினான்.
- திருக்குறளைப் பொதுமறை என்றும் கூறுவர்.

வாசிப்போம்



- இலைகள் உதிர்கின்றன.
- கொக்கின் அலகு நீளமானது.
- நூல்கள் நூலகத்தில் இருக்கின்றன.
- யானை கரும்பை விரும்பித் தின்னும்.
- மீன்கள் மீன் தொட்டியில் இருக்கின்றன.

வாசிப்போம்



- தமிழ்த்திறன் போட்டி.
- பூக்கள் மணம் வீசுகின்றன.
- உயிர்களிடத்தில் அன்பாய் இருப்போம்.
- ஒவ்வொரு நாளும் பழங்கள் உண்போம்.
- ஈழமும் தமிழகமும் தமிழரின் தாய்நிலங்கள்.



வாசிப்போம்

- விளையாட்டுத் திடல்.
- நாம் மாவீரரை வணங்குவோம்.
- ஔவையார் மூதுரையை எழுதினார்.
- பனிக்கரடி பார்க்க அழகாக இருக்கும்.
- சேந்தன் ஓவியப் போட்டியில் பங்குபற்றினான்.

வாசிப்போம்



- இளநீர் குடித்தேன்.
- ஆண்டுவிழா பள்ளியில் நடைபெற்றது.
- சோமசுந்தரப்புலவர் நவாலியில் பிறந்தார்.
- குயில் கூ கூ என்று கூவியது.
- நான் நண்பர்களுடன் விலங்ககம் சென்றேன்.



வாசிப்போம்

- பேருந்து நிலையம்.
- நண்பிக்குப் பரிசு கொடுத்தேன்.
- நான் கடற்கரைக்குச் சென்றேன்.
- தாத்தா காலையில் செய்தித்தாள் படிப்பார்.
- திருக்குறள் இரண்டு அடிகளைக் கொண்டது.

வாசிப்போம்




- தமிழர் திருநாள்.
- என்றும் உண்மை பேசுவோம்.
- தமிழினி பொம்மை வாங்கினாள்.
- நான் குதிரை வண்டியில் சென்றேன்.
- தமிழர் பல நாடுகளில் வாழ்கின்றனர்.

வாசிப்போம்



- நரி ஊளையிடும்.
- வயல்கள் பசுமையாக இருந்தன.
- மாமாவுடன் பள்ளிக்குச் சென்றேன்.
- காவியன் நன்றாக ஓவியம் வரைவான்.
- நாம் எமது தாய்நாட்டைப் போற்றுவோம்.

வாசிப்போம்



- விளையாட்டுப் போட்டி.
- அக்கா நூல் வாசிக்கிறார்.
- கலைகள் உளமகிழ்வைத் தரும்.
- நல்ல நட்பே உயர்வைத் தரும்.
- பாவலன் இனிமையாக மேளம் வாசித்தான்.

வாசிப்போம்



- முல்லை நிலம்.
- பாரி ஒரு வள்ளல்.
- சிலந்தி வலை பின்னும்.
- வள்ளுவர் ஒரு தமிழ்ப் புலவர்.
- தாய் சொல்லைத் தட்டக் கூடாது.

வாசிப்போம்



- கல்வி கற்போம்.
- நாளும் உடற்பயிற்சி செய்வோம்.
- வண்ணத்துப்பூச்சி தேனைக் குடித்தது.
- தை முதலாம்நாள் புத்தாண்டுப் பிறப்பு.
- காலையில் எழுந்து பாடம் படிப்போம்.

வாசிப்போம்




- மாலையில் விளையாடுவோம்.
- நல்ல நூல்களைப் படிப்போம்.
- காவியா நன்றாகப் பாடுவாள்.
- மயிலுக்கு நீண்ட தோகை உண்டு.
- நான் விளையாட்டுப் போட்டியில் ஓடினேன்.

வாசிப்போம்



- கதை கேட்போம்.
- பாம்பு புற்றில் வாழும்.
- மல்லிகை மாலையில் மலரும்.
- சங்கிலியன் ஒரு சிறந்த வீரன்.
- நாங்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

வாசிப்போம்



- முத்து மாலை.
- யானை பெரிய விலங்கு.
- நான் காலையில் பாடம் படிப்பேன்.
- வௌவால் தலைகீழாய்த் தொங்கும்.
- அழகான தாமரை குளத்தில் பூத்திருந்தது.

வாசிப்போம்



- பிறருக்கு உதவுவோம்.
- பாவலன் தேர்வு எழுதினான்.
- நான் கணினியில் விளையாடினேன்.
- நாம் வீட்டில் தமிழில் பேசுவோம்.
- தம்பி சிறுவர் பூங்காவுக்குச் சென்றான்.

வாசிப்போம்



- குறள் படிப்போம்.
- முயல் விரைவாக ஓடும்.
- மான்கள் தண்ணீர் குடித்தன.
- நான் வெள்ளத்தில் கப்பல் விட்டேன்.
- சின்னம்மா சிவப்புச் சேலை அணிந்தார்.

வாசிப்போம்



- இடி இடிக்கிறது.
- சிறுவர் படம் பார்த்தனர்.
- காவலர் கள்வனைப் பிடித்தனர்.
- உயரமான கம்பத்தில் கொடி பறக்கிறது.
- நாம் சத்துள்ள உணவுகளை உண்போம்.

வாசிப்போம்



- வரவேற்பு அறை
- திமிங்கிலம் கடலில் வாழும்.
- தமிழ் பழைமையான மொழி.
- பூனை எனது செல்ல உயிரி.
- குதிரைகள் குளத்தில் நீர் குடித்தன.

வாசிப்போம்



- சங்கிலியன் தோப்பு
- பால் சிறந்த உணவு.
- வேழன் சிற்பம் செதுக்குவான்.
- அண்ணா பூச்செடிக்கு நீர் ஊற்றினார்.
- நான் விடுமுறையில் தாயகம் சென்றேன்.



வாசிப்போம்

- சறுக்கியில் சறுக்கினேன்.
- தமிழ் எங்கள் தாய்மொழி.
- இலக்கியா தாளம் போடுகின்றாள்.
- பெரியம்மா தோட்டத்தில் கீரை பிடுங்கினார்.
- அம்மா தொலைக்காட்சியில் நாடகம் பார்க்கின்றார்.

வாசிப்போம்



- வள்ளுவர் சிலை
- எலி வளையில் வாழும்.
- நாலடியார் சிறந்த அறநூல்.
- சிறுவர் பனிகாலத்தில் பனிப்பாவை செய்வர்.
- நான் கோடைகாலத்தில் சுற்றுலாச் செல்வேன்.

வாசிப்போம்



- தமிழ்ப்பள்ளி தொடங்கியது.
- நாங்கள் மாவீரர்நாளுக்குச் சென்றோம்.
- கிளி கொய்யாப்பழத்தைக் கொத்துகின்றது.
- விளையாட்டு ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும்.
- தேயிலைத் தோட்டம் அழகாக இருக்கிறது.

வாசிப்போம்



- மிதியுந்து வாங்கினேன்.
- பாரி தேரில் சென்றான்.
- கதிரவன் அதிகாலையில் காலிக்கும் .
- நாம் நல்ல நூல்களைக் கற்போம்.
- மன்னன் புலவருக்குப் பரிசு கொடுத்தான்.

வாசிப்போம்



- மயில் அகவும்.
- கடவைவிளக்கு ஒளிர்ந்தது.
- பலாப்பழம் பெரிதாக இருக்கும்.
- மரத்தில் இருந்து இலைகள் உதிர்ந்தன.
- நாம் உயிர்களிடத்தில் அன்பாய் இருப்போம்.

வாசிப்போம்



- பூச்சிகள் பறக்கின்றன.
- அப்பா உணவகம் சென்றார்.
- பொங்கலன்று புத்தாடை அணிவோம்.
- மயில் தோகையை விரித்து ஆடியது.
- ஒளிநிலா ஓட்டப் போட்டியில் வென்றாள்.

வாசிப்போம்



- ஆண்டுவிழா நடைபெற்றது.
- நிலா மலர்களைக் கொய்கின்றாள்.
- குழந்தை தொட்டிலில் உறங்கியது.
- ஆவின் கன்று துள்ளித்துள்ளி ஓடுகிறது.
- பாரதியார் சிறந்த பாடல்களைப் பாடினார்.

வாசிப்போம்



- குறள் படிப்போம்.
- கடல் நீர் உவர்க்கும்.
- நோய் இன்றி வாழ்வோம்.
- எனது வீட்டுத் தோட்டம் அழகானது.
- பெரிய விண்ணுந்து வானில் செல்கின்றது.

வாசிப்போம்



- கங்காரு தாவும்.
- யானையின் தும்பிக்கை நீளமானது.
- கொக்கு ஒற்றைக் காலில் நிற்கும்.
- கடையில் நிறையப் பொம்மைகள் இருக்கின்றன.
- கடற்கரையில் அழகான சிப்பிகள் காணப்பட்டன.

வாசிப்போம்



- இலையுதிர் காலம்.
- மச்சாள் சட்டை தைத்தார்.
- சிற்றப்பா யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றார்.
- பாட்டி ஆடிப்பிறப்புக்குக் கூழ் காய்ச்சினார்.
- வெள்ளை அன்னம் குளத்தில் நீந்துகின்றது.

வாசிப்போம்



தாமரைப்பூ

- தாமரைப்பூ அழகானது.
- இது குளத்தில் பூக்கும்.
- தாமரைப்பூ காலையில் மலரும்.
- இதன் இதழ்கள் பெரிதாக இருக்கும்.
- இது வெள்ளை, சிவப்பு நிறங்களில் காணப்படும்.

வாசிப்போம்



மாம்பழம்

- மாம்பழம் இனிக்கும்.
- இது மஞ்சள் நிறமுடையது.
- மாம்பழம் முக்கனிகளில் ஒன்றாகும்.
- இதன் காயை மாங்காய் என்போம்.
- எல்லோரும் மாம்பழத்தை விரும்பி உண்பர்.

வாசிப்போம்



அம்மா

- அம்மா அன்பானவர்.
- அம்மா உணவு சமைப்பார்.
- எங்களை அன்புடன் வளர்ப்பார்.
- அம்மா பாடம் சொல்லித் தருவார்.
- நாங்கள் அம்மாவின் சொல்லைக் கேட்போம்.


வாசிப்போம்



தமிழ்ப்பள்ளி

- தமிழ்ப்பள்ளிக்குச் செல்வோம்.
- பள்ளியில் தமிழைக் கற்போம்.
- தமிழ் நண்பர்களைக் காண்போம்.
- அவர்களுடன் தமிழில் பேசி மகிழ்வோம்.
- இனிய தமிழ் எங்கள் தாய்மொழியாகும்.

வாசிப்போம்



கதிரவன்

- கதிரவன் கிழக்கில் காலிக்கும்.
- கதிரவன் மேற்கில் மறையும்.
- கதிரவனால் மழை கிடைக்கின்றது.
- பகலவன் என்றும் கதிரவனை அழைப்பர்.
- தைப்பொங்கலன்று கதிரவனுக்கு நன்றி கூறுவர்.

வாசிப்போம்



நாய்

- நாய் செல்ல உயிரி.
- நாய் வீட்டைக் காக்கும்.
- நாய் நன்றி உள்ள விலங்கு.
- நாயில் பல இனங்கள் உள்ளன.
- இது கள்வனைக் கண்டால் குரைக்கும்.


வாசிப்போம்



எறும்பு

- எறும்பு ஒரு சிறிய உயிரி.
- இவை சேர்ந்தே வாழும்.
- எறும்புகள் சுறுசுறுப்பானவை.
- இவை உணவு தேட ஒன்றாகவே செல்கின்றன.
- எறும்பு வாழும் இடம் புற்று எனப்படும்.

வாசிப்போம்



மழை

- மழை பெய்யும்.
- மழை நீர் தூய்மையானது.
- மழையினால் குளங்கள் நிரம்பும்.
- பயிர்கள் மழையினால் செழித்து வளரும்.
- கதிரவனால் எங்களுக்கு மழை கிடைக்கிறது.

வாசிப்போம்



என் அப்பா

- அப்பா அன்பானவர்.
- நான் அப்பா சொல்வதைக் கேட்பேன்.
- எனக்கு அப்பாவை மிகவும் பிடிக்கும்.
- நான் அப்பாவுடன் வெளியே செல்வேன்.
- என் அப்பா எனக்கு அறிவுரை கூறுவார்.

வாசிப்போம்



ஆடு

- ஆடு கத்தும்.
- இது ஒரு வீட்டு விலங்கு.
- ஆட்டுப்பால் சத்துள்ள உணவு.
- ஆட்டுக்குட்டி துள்ளித்துள்ளி ஓடும்.
- ஆடு இலை குழைகளைத் தின்னும்.

வாசிப்போம்



கிளி

- கிளி பேசும்.
- கிளி பல நிறங்களில் காணப்படும்.
- இது கூட்டங்கூட்டமாகப் பறக்கும்.
- கிளி பழங்களை விரும்பித் தின்னும்.
- சிலர் கிளிகளைக் கூண்டில் வளர்ப்பர்.


வாசிப்போம்



தென்னை மரம்

- தென்னை மரம் உயரமானது.
- இதன் இலையைத் தென்னோலை என்பர்.
- தென்னோலையில் தோரணம் செய்வர்.
- தென்னை மரத்தை தெங்கு எனவும் அழைப்பர்.
- இதன் இளநீர் குடிக்கச் சுவையாக இருக்கும்.
- தென்னையில் இருந்து தேங்காய் பெறப்படும்.

வாசிப்போம்



சோளம்

- சோளம் சிறந்த உணவாகும்.
- இதனை அனைவரும் விரும்பி உண்பர்.
- சோளம் கூல வகையைச் சேர்ந்தது.
- சோளத்தை அவித்தும் வறுத்தும் உண்பர்.
- கூடுதலான நாடுகளில் சோளத்தைக் காணலாம்.

வளர் தமிழ் 3

வாசிப்போம்

வாசிப்போம்



ஔவையார்

ஔவையார் ஒரு தமிழ்ப் பெண்புலவர். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். ஔவையார் பல நூல்களை எழுதினார். அவற்றில் சில ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பனவாகும். இவரின் பாடல்கள் சிறுவருக்கும் விளங்கக்கூடியவை. ஔவையாரை ஔவைப்பாட்டி என்றும் அழைப்பர். நாங்கள் ஒளைவையாரின் நூல்களைத் தேடிக் கற்போம். என்றும் நல்லவர்களாக வாழ்வோம்.

வாசிப்போம்



பிறருக்கு உதவுவோம்

மாறன் ஒரு சிறுவன். அவன் மிகவும் நல்லவன். ஒரு நாள் மாறன் குளக்கரைக்குச் சென்றான். அங்கு உள்ள மரத்தின் அடியில் இரண்டு குருவிக் குஞ்சுகள் கீழே விழுந்து கிடந்தன. மாறன் அவற்றைக் கையில் எடுத்துக் கூட்டில் விட்டான். அப்போது அங்கே ஒரு பெரியவர் வந்தார். அவர் மாறனின் செயலைக் கண்டு மகிழ்ந்தார். மாறனுக்கு நன்றி கூறினார்.

நாமும் பிறருக்கு உதவி செய்வோம்.

வாசிப்போம்



பிறந்தநாள்

தமிழினி பத்து அகவை நிரம்பிய சிறுமி. அவள் தனது பிறந்தநாளை நண்பர்களுடன் கொண்டாட விரும்பினாள். தமிழினி பிறந்தநாளுக்குத் தனது நெருங்கிய நண்பர்களை வீட்டிற்கு அழைத்தாள். அவர்கள் வீட்டிற்கு வந்ததும் தமிழினிக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறினர். தமிழினி நண்பர்களுடன் சேர்ந்து கட்டிகையை வெட்டி மகிழ்ந்தாள். அப்பொழுது நண்பர்கள் சேர்ந்து பிறந்தநாள் பாடலைப் பாடினர். தமிழினி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். பின்பு எல்லோரும் சிற்றுண்டி உண்டு மகிழ்ந்தனர்.

வாசிப்போம்



சின்னத்தம்பிப் புலவர்

யாழ்ப்பாணத்து நல்லூரில் வில்லவராய முதலியார் வாழ்ந்தார். அவருடைய வீட்டைத்தேடி ஓர் அறிஞர் வந்தார். ஆனால் அறிஞரால் வில்லவராய முதலியாரின் வீட்டை அடையாளம் காண முடியவில்லை. அருகில் சிறுவர் விளையாடிக் கொண்டிருந்தனர். அறிஞர் அவர்களிடம் சென்று வில்லவராயமுதலியார் வீடு எங்கே உள்ளது எனக் கேட்டார். அங்கிருந்த சிறுவன் ஒருவன் பாடல் மூலம் வீட்டை அடையாளம் காட்டினான். பாடலைக் கேட்ட அறிஞர் பாடலின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தார். சிறுவனைப் பாராட்டினார். அச்சிறுவன் வில்லவராய முதலியாரின் மகன். அவன் பிற்காலத்தில் சின்னத்தம்பிப் புலவராகப் புகழ் பெற்றான்.

வாசிப்போம்



தமிழர் பண்பாடு

தமிழராகிய நாம் ஒருவரை ஒருவர் காணும் போது வணக்கம் கூறுகின்றோம். வணக்கம் கூறுவது தமிழர் பண்பாடுகளில் ஒன்று. நன்றி கூறுவதும் எமது பண்பாடு. யாராவது எமக்குச் சிறு உதவி செய்தாலும் நாம் அவருக்கு நன்றி கூறுகின்றோம். கதிரவன் எங்களுக்கு ஒளியையும் மழையையும் தருகின்றான். கதிரவனுக்கு நன்றி கூறுவதற்காகவே நாம் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றோம்.

வாசிப்போம்



பனைமரம்

பனைமரம் மிகவும் உயரமாக வளரும். இதற்குக் கிளைகள் இல்லை. இம்மரத்தின் இலையை ஓலை என்று அழைப்பர். பனையோலையை வேலி அடைப்பதற்கும் பெட்டி, சுளகு, கடகம், பாய், போன்ற பொருட்களை ஆக்குவதற்கும் பயன்படுத்துவர். பனையிலிருந்து நுங்கு, பனம்பழம், பதநீர் போன்றவையும் கிடைக்கின்றன. பதநீரில் இருந்து பனங்கட்டி செய்வர். பனை மரத்திலிருந்து எமக்குப் பல பயன்கள் கிடைக்கின்றன. பனைமரங்களைக் கூடுதலாக யாழ்ப்பாணத்தில் காணலாம்.

வாசிப்போம்



மீன்தொட்டி

இளந்திரையன் அப்பாவுடன் கடைக்குச் சென்றான். கடையில் உள்ள பொருட்களைச் சுற்றிப் பார்த்தான். அவனுக்கு அந்தக் கடையில் இருந்த மீன்தொட்டி மிகவும் பிடித்திருந்தது. அப்பாவிடம் மீன்தொட்டியை வாங்கித் தரும்படி கேட்டான். உடனே அப்பா அந்த மீன் தொட்டியை வாங்கிக் கொடுத்தார். மீன்தொட்டிக்குத் தேவையான பொருட்களையும் வண்ணவண்ண மீன்களையும் அருகில் உள்ள கடையில் வாங்கினார். இளந்திரையன் மகிழ்ச்சியோடு வீட்டிற்கு வந்தான். மீன்தொட்டிக்குள் மீன்களை விட்டு வளர்த்தான்.

வாசிப்போம்



உப்பு

உப்பு உணவைச் சுவையாக்குகின்றது. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்று நம் முன்னோர் கூறுவர். இவ்வுப்பானது கடலில் இருந்து பெறப்படுகிறது. நாம் உப்பை உணவில் சேர்க்கும் போது அளவாகச் சேர்க்க வேண்டும். உப்பின் அளவு உடலில் அதிகரிக்கும் போது எமக்குப் பல நோய்கள் வருகின்றன. எனவே நாம் நோயிலிருந்து எமது உடலைப் பேண உப்பின் அளவைக் குறைத்துக் கொள்வோம். நோயின்றி வாழ்வோம்.



வாசிப்போம்

பண்டாரவன்னியன்

இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் வன்னியின் மன்னனாகப் பண்டாரவன்னியன் இருந்தான். ஆங்கிலேயர் வன்னியிலும் தம் ஆட்சியை நிறுவ முயன்றனர். பண்டாரவன்னியன் அதனை எதிர்த்தான். ஆங்கிலேயர் பெரும் படையைப் பண்டாரவன்னியன் மீது ஏவி விட்டனர். பண்டாரவன்னியன் கதிர்காமநாயகம் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டான். ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைச் சுட்டனர். பண்டாரவன்னியன் வீரச்சாவு அடைந்தான். அவன் உயிர் இழந்த இடத்தில் மாவீரனுக்கான நடுகல் ஒன்று நாட்டப்பட்டது.

வாசிப்போம்



ஆசிரியர்

ஆசிரியர்கள் எங்களுக்கு நல்ல வழிகாட்டிகள். அவர்கள் எங்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்றனர். ஆசிரியர் எங்கள் கல்வியில் மிகவும் கவனம் செலுத்துவர். நாங்கள் அவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். ஆசிரியர் தரும் வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்தல் வேண்டும். ஆசிரியர்கள் எங்கள் எதிர்காலத்தில் மிகவும் அக்கறை உள்ளவர்கள். அவர்கள் கூறும் நல்ல பழக்கவழக்கங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.



வாசிப்போம்

தாலாட்டு

மக்களிடையே வாய்மொழி வழியாக வழங்கி வரும் பாடல்களே நாட்டார் பாடல்கள். அவை பலராலும் பாடப்பட்டு வருபவை. மக்களின் எளிய வாழ்க்கை முறையைக் காட்டுபவை. மக்கள் கூடித் தொழில் புரியும் போது குழுப்பாடல்கள் பாடுவர். தாய் குழந்தையை உறங்க வைக்கப் பாடுவது தாலாட்டுப்பாடல். தாய் தன் குழந்தையைத் தொட்டிலில் இடுவார். தொட்டிலை ஆட்டியபடியே

ஆராரோ ஆரிவரோ

ஆரடித்து நீ அழுதாய்

எனப் பாடத் தொடங்குவார். பாடலைக் கேட்டபடியே குழந்தை உறங்கும். தாலாட்டுப் பாடலும் நாட்டார் பாடலாகும்.



தமிழ்

தமிழ் எங்கள் தாய்மொழி. இது ஓர் இனிய மொழி; பழமையான மொழி. தமிழர் தமிழ் பேசுவர். தமிழில் பல சிறந்த நூல்கள் உள்ளன. திருக்குறள், நாலடியார் என்பன சிறந்த அறநூல்களாகும். இவை மாந்தன் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றிக் கூறுகின்றன. சிலப்பதிகாரம் தமிழரின் பண்பாட்டைக் கூறுகின்றது. புறநானூறு தமிழரின் வீரத்தைக் கூறுகின்றது. நாம் எமது தாய்மொழியாம் தமிழைக் கற்போம். தமிழில் பேசுவோம்.

வாசிப்போம்



தனக்கு வந்தால் தெரியும்

நாங்கள் உயிர்களிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். எந்த உயிரையும் துன்புறுத்தக் கூடாது. எங்களிற் பலர் பறவைகளைக் கூண்டில் அடைத்து வளர்க்கின்றோம். எங்களின் மகிழ்ச்சிக்காக நாம் அவற்றைத் துன்புறுத்துகின்றோம். "கிளியைக் கூண்டில் அடைக்காதே கேடுகள் வந்து சேர்ந்திடுமே" எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். தன் இனத்துடன் ஒன்றாகச் சேர்ந்து உண்டு மகிழ்ந்து பறந்து திரியும் கிளியைக் கூண்டில் அடைத்து அதனைத் தனியாகப் பிரித்து விடுகின்றோம். எங்களை யாரும் இப்படிச் செய்தால் எப்படி இருக்கும்? எமது உறவுகளை விட்டு எம்மால் தனித்திருக்க முடியுமா? சிறிது நினைத்துப் பாருங்கள்.

வாசிப்போம்



கோடை காலம்

கோடை காலம் சிறுவருக்குப் பிடித்த காலம். இக்காலத்தில் நீண்ட பள்ளி விடுமுறை விடப்படும். மரங்கள் பசுமையாகக் காட்சி அளிக்கும். எங்கும் பல வண்ணப் பூக்கள் பூத்திருக்கும். சிறுவர் முதல் பெரியவர்வரை கடற்கரைக்குச் செல்வர். கடலில் நீந்தி மகிழ்வர். குழந்தைகள் மணல் வீடு கட்டுவர். பட்டம் விட்டு விளையாடுவர். கோடைகாலத்தில் சிறுவர் பூங்காவிற்குச் செல்வர், ஊஞ்சல் ஆடி மகிழ்வர், மிதியுந்தில் ஓடித்திரிவர். கோடை காலம் என்றாலே அனைவருக்கும் கொண்டாட்டம்.

வாசிப்போம்



எமது பெற்றோர்

நாம் எமது பெற்றோரை மதித்து நடக்க வேண்டும். எமக்குத் தேவையானவற்றை எல்லாம் பெற்றோர் வாங்கித் தருகின்றனர். எங்கள் கல்வியில் பெற்றோர்கள் மிகவும் அக்கறை உள்ளவர்கள். நாங்கள் என்றும் நல்ல பிள்ளைகளாக வாழவேண்டும் என்பதே எமது பெற்றோரின் விருப்பம். எங்கள் நல்வாழ்விற்காக இரவும் பகலும் கடினமாக உழைக்கின்றனர். எங்கள் பெற்றோரை நாம் என்றும் மறக்கக் கூடாது.

வாசிப்போம்



மறதி

எங்கள் தமிழ்ப்பள்ளியில் மாறுவேடப் போட்டி நடைபெற்றது. நான் முயல் வேடம் போட விரும்பினேன். அவ்வேடம் போட எனக்குக் கூடுதலான நேரம் எடுத்தது. வேடம் போட்டு முடிந்ததும் நான் வெளியே வந்தேன். நான் மேடையில் ஏறியதும் எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்தனர். நான் திரும்பிப் போய்க் கண்ணாடியைப் பார்த்தேன். அப்போதுதான் நான் வாலை அணிய மறந்துவிட்டேன் என்பது தெரிந்தது. எனக்கும் சிரிப்பு வந்தது.



வாசிப்போம்

ஒற்றுமை

ஒரு காட்டில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதில் குருவிகள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அந்த மரம் தீப்பிடித்துக் கொண்டது. அப்போது ஒரு குருவி மட்டுமே மரத்தில் இருந்தது. உடனே அக் குருவி பக்கத்தில் உள்ள குளத்து நீரை உறிஞ்சிக் கொண்டு வந்து பலமுறை மரத்தின் மீது தெளித்தது. ஆனால் தீ அணையவில்லை. உடனே தன் இனக் குருவிகளை ஒலி எழுப்பி அழைத்தது. எல்லாக் குருவிகளும் பறந்து வந்தன. நீரை உறிஞ்சி மரத்தில் தெளித்தன. தீ அணைந்தது.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.''

வாசிப்போம்




முயற்சி

அன்று விடுமுறைநாள். சேயோன் தன் பெற்றோருடன் கடற்கரைக்குச் சென்றான். கடற்கரையில் பல சிறுவர் பட்டம் விட்டும் மணல் வீடுகட்டியும் நீந்தியும் விளையாடுவதைப் பார்த்தான். தானும் மணல் வீடு கட்டி விளையாட விரும்பினான். மிகவும் அழகான மணல் வீட்டைக் கட்டினான். எல்லோரும் பார்த்து மகிழ்ந்தனர். சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. சேயோனின் மணல் வீடு உடைந்தது. சேயோன் மிகவும் கவலைப்பட்டான். மழைவிட்டதும் மீண்டும் மணல் வீடு கட்டலாம் எனப் பெற்றோர் கூறினர். மழையும் நின்றது. சேயோன் முன்னரைவிட ஓர் அழகான மணல்வீட்டைக் கட்டினான். எல்லோரும் சேயோனைப் பாராட்டினர்.

'முயற்சி திருவினையாக்கும்."

வாசிப்போம்



தூய்மையாக இருப்போம்

எம்மைச் சுற்றி இருக்கும் இடத்தினைச் சூழல் என்கிறோம். நாம் வாழும் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எங்களிற் சிலர் குப்பைகளை நாம் இருக்கும் இடத்திலேயே போட்டு விடுகின்றோம். இது ஒரு தவறான பழக்கமாகும். குப்பைகளை எப்பொழுதும் குப்பைத் தொட்டிகளிலோ அல்லது குப்பைக் கூடைகளிலோதான் போட வேண்டும். அல்லாவிட்டால் எங்களைச் சுற்றி உள்ள சூழல் அழுக்காகிவிடும். இதனால் எமக்கு நோய்கள் பலவும் ஏற்படும்.



வாசிப்போம்

பூக்கள்

பூக்கள் மிகவும் அழகாக இருக்கும். நீலம், சிவப்பு, பச்சை, வெள்ளை, ஊதா, மஞ்சள் போன்ற பல நிறங்களில் பூக்கள் காணப்படும். பூக்களில் தேன் இருக்கின்றது. சில பூக்கள் காலையில் மலரும். சில பூக்கள் மாலையில் மலரும். கூடுதலாக வெண்ணிறப் பூக்கள் மாலையில் மலரும். பூக்கள் நறுமணம் வீசும். மல்லிகை, முல்லை, செம்பருத்தி, செவ்வந்தி, கார்த்திகைப் பூ எனப் பூக்களில் பல வகை உண்டு. கார்த்திகைப்பூ எமது தேசிய மலராகும்.

வாசிப்போம்



யானை

யானை ஒரு பெரிய விலங்கு. இது கூடுதலாகக் காட்டில் வாழும். இதன் கண்கள் சிறிதாக இருக்கும். காதுகள் சுளகு போல் பெரிதாக இருக்கும். யானைக்கு இரண்டு மருப்புகள் உண்டு. யானையின் தும்பிக்கை நீளமாக இருக்கும். தும்பிக்கையினால் பாரமான பொருட்களைத் தூக்கும். யானை கரும்பை விரும்பித் தின்னும். யானைகள் கூட்டங்கூட்டமாகச் செல்லும். யானைகள் ஆசிய, ஆபிரிக்கக் காடுகளில் கூடுதலாக வாழ்கின்றன.


வாசிப்போம்



தாயர்நாள்

நிலா ஒரு உண்டியல் வைத்திருந்தாள். ஒரு நாள் அவள் தனது உண்டியலை எடுத்து யாருக்கும் தெரியாமல் உடைத்தாள். அதற்குள் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குப் போனாள். உண்டியல் உடைந்திருந்ததைப் பார்த்து நிலாவின் அம்மா சினம் அடைந்தார். நிலா வரும்வரை காத்திருந்தார். நிலா கையில் ஒரு அழகிய மலர்க்கொத்துடன் வந்தாள். அதை அம்மாவிடம் கொடுத்து இன்று தாயர்நாள் எனக்கூறி அம்மாவை வாழ்த்தினாள். அம்மா நிலாவை அணைத்து முத்தமிட்டார்.

வாசிப்போம்



இன்கலைகள்

இன்கலைகள் மகிழ்ச்சியைத் தரும். இவை அழகுக் கலைகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இசை, நடனம், ஓவியம், நாடகம், சிற்பம் என்பன இன்கலைகளாகும். இன்கலைகளில் செவிக்கும் மனதிற்கும் இன்பம் ஊட்டுவது இசைக் கலையாகும். வண்ணக் குழையல்களால் எம்மனதைக் கவர்வது ஓவியம். இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப நளினங்களை வெளிப்படுத்துவது ஆடற்கலையாகும். கண்ணிழந்தோரும் கண்டுணரும் கலை சிற்பக் கலையாகும்.

வாசிப்போம்



மயில்

மயில் ஓர் அழகான பறவை. இது பெரும்பாலும் காடுகளில் உள்ள மரங்களில் வாழும். ஆண்மயிலுக்கு அழகிய தோகை உண்டு. இதன் தோகை நீண்டிருக்கும். தோகையில் நீலம், பச்சை, மஞ்சள் போன்ற நிறங்கள் காணப்படும். இதன் தலையில் ஒரு சிறிய கொண்டை காணப்படும். மயிலின் இறகை எல்லோரும் விரும்பி வாங்குவார்கள். மழையைக் கண்டால் மயில் மகிழ்ச்சியுடன் தன் தோகையை விரித்து ஆலும்.



வாசிப்போம்

பொய் சொல்லக் கூடாது

செல்வன் மிகவும் நல்ல சிறுவன். ஆனால் எதற்கும் விளையாட்டாகப் பொய் சொல்வான். தனது நண்பர்களை நாளும் பொய் சொல்லி ஏமாற்றுவான். ஒரு நாள் நண்பர்களுடன் கடற்கரைக்குச் சென்று விளையாடினான். நண்பர்கள் கடலில் குளிக்க வரும்படி செல்வனை அழைத்தனர். தனக்கு நீந்தத் தெரியாது எனச் செல்வன் சொன்னான். நண்பர்கள் அதனை நம்பவில்லை. செல்வனை இழுத்துக் கொண்டுபோய்க் கடலில் தள்ளினர். செல்வன் கடலில் மூழ்கினான். உடனே நண்பர்கள் அவனைக் காப்பாற்றினர். செல்வனுக்கு உண்மையில் நீந்தத் தெரியாது என்பது நண்பர்களுக்குத் தெரிந்தது. நாங்கள் விளையாட்டாகக் கூடப் பொய் சொல்லக் கூடாது.

வளர் தமிழ் 4

வாசிப்போம்

வாசிப்போம்



சிறுத்தை

உலகிலேயே மிகவிரைவாக ஓடும் விலங்கு சிறுத்தை. இலங்கையில் வன்னிப்பகுதிகளிலும் மன்னார்க் காடுகளிலும் சிறுத்தைகளை அதிகம் காணலாம். இச்சிறுத்தைகள் மான், குரங்கு, முள்ளம்பன்றி போன்றவற்றை வேட்டையாடி உண்ணும். இவை விலங்குகளை விரைவாகத் துரத்திச் சென்று வேட்டையாடும். இச்சிறுத்தைகளுக்கு மிகுந்த கேட்டல் திறனும் கூர்மையான பார்வையும் உண்டு. இவை இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்றன. சிறுத்தை தமிழீழத்தின் தேசிய விலங்கு.

வாசிப்போம்



இளங்கோவடிகள்

பழந்தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியர் ஆண்டு வந்தனர். அவர்கள் மூவேந்தர் என அழைக்கப்பட்டனர். சேர நாட்டை சேரர் ஆண்டு வந்தனர். சேர நாட்டு மன்னன் நெடுஞ்சேரலாதன். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் செங்குட்டுவன் இளையவன் இளங்கோ. ஒரு நாள் அரசவை கூடியிருந்த வேளை மாடலன் என்னும் கணிகன் வந்தான். அவன் மன்னனை நோக்கி "தங்களுக்குப் பிறகு இளங்கோதான் மன்னனாவான்" என்று கூறினான். இதைக் கேள்வியுற்ற இளங்கோ சினங் கொண்டான். இக் கூற்றைப் பொய்யாக்க விரும்பினான். இளங்கோ அரசவாழ்வைத் துறந்து துறவியானார். அன்றிலிருந்து அவர் இளங்கோவடிகளானார். காலத்தால் அழியாத சிலப்பதிகாரத்தை எமக்குத் தந்தவரும் இவரே.

வாசிப்போம்



உணவு

உடல் வளர்ச்சிக்குக் கட்டாயமாகத் தேவைப்படுவது உணவு. உடலை நோய் வராமல் காப்பதற்கும் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் சத்துள்ள உணவு தேவை. நாம் உண்ணும் உணவில் காய்கறிகள், இறைச்சி, முட்டை, பால், பழங்கள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். இவை உடல் உறுப்புகள் சீராக இயங்கத் தேவையான வலுவைத் தருகின்றன. நாம் உடலுக்கு ஏற்ற உணவை அறிந்து உண்பதன் மூலம் நோய்கள் வராமல் தடுக்கலாம். உணவு மட்டுமன்றித் தூய்மையான நீரும் உடல் நலத்திற்கு இன்றியமையாதது. நீர் உடல் வெப்பத்தைக் குறைப்பதோடு உணவு நன்றாகச் செரிப்பதற்கும் உதவுகின்றது.

வாசிப்போம்



ஈகி திலீபன்

இராசையா பார்த்திபன் என்கின்ற இயற்பெயரை உடையவர் தியாகி திலீபன். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊரெழு என்ற இடத்தில் பிறந்தார். கல்வியில் திறமைமிக்கவராகத் திகழ்ந்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியைக் கற்று வந்தார். 1987இல் இந்தியப்படை தமிழீழத்திற்கு வந்தது. அது தமிழ் மக்களைக் கொன்று குவித்தது. இதனைக் கண்ட திலீபன் கொதித்தெழுந்தார். தன் மக்களுக்காக அறவழியில் போராடினார். ஒருதுளி நீரோ, உணவோ அருந்தாமல் சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். ஆனால் இந்திய அரசு இரக்கமின்றி நடந்து கொண்டது. எங்கள் ஈகி திலீபனின் அறவழிப்போராட்டத்தை அது மதிக்கவில்லை. திலீபன் தன் மக்களுக்காக, தன் மக்களின் விடுதலைக்காகப் பன்னிரண்டாம் நாள் 26.09.1987 அன்று தன் உயிரை ஈகம் செய்தார்.



வாசிப்போம்

யாழ்

மிகப் பழங்காலந் தொட்டே தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வந்த இசைக் கருவிகளில் யாழ் முதன்மை பெற்றது. இது நரம்புக் கருவி வகையைச் சேர்ந்தது. வில்லில் நாணை ஏற்றி அம்பு எய்த போது இசையொலி எழுந்தது. அதனைக் கொண்டு வில்லின் வடிவில் யாழைப் படைத்தனர். பண்டைய யாழ் பிற்காலத்தில் சிறிது உருமாறி வீணையாயிற்று. யாழிசை தமிழ் மக்களிடையே பெரிதும் மதிப்பைப் பெற்றது. யாழ் இசைப்போரைத் தமிழர் 'பாணர்' என்று அழைத்தனர். இன்று இசை நிகழ்வுகளின் போது வயலினும் வீணையும் வகிக்கும் இடத்தை அன்று யாழ் வகித்தது. விபுலாநந்தரால் எழுதப்பட்ட 'யாழ்நூல்' என்ற நூலில் யாழைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.


வாசிப்போம்



தீங்கு செய்யாதே

ஒரு சிறுவன் வெளியே விளையாடச் சென்றான். அங்கு ஒரு பெரிய மரம் ஒன்று நின்றது. அந்த மரத்தின் கிளையில் குளவிக்கூடு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. சிறுவன் குளவிக்கூட்டின் அருகே சென்றான். ஒரு கல்லை எடுத்துக் குளவிக் கூட்டுக்கு எறிந்தான். கூட்டைவிட்டுக் குளவிகள் வெளியே வந்தன. வெளியே வந்த குளவிகள் சிறுவனைக் கொட்டின. சிறுவன் வலியால் அழுது கொண்டு ஓடினான். எவருக்கும் நாம் தீங்கு செய்யக்கூடாது. நாம் பிறருக்குத் தீங்கு செய்தால் அது எமக்குத் தீங்காய் அமைந்துவிடும்.

வாசிப்போம்



செண்பகம்

செண்பகம் முல்லை நிலத்திற்குரிய பறவையாகும். இது அமைதியான பறவை. இது கறுப்பு நிற உடலும் காவிநிறச் செட்டையும் உடையது. செண்பகம் ஏனைய பறவைகளைவிட வேறுபட்ட ஒரு பண்பைக் கொண்டது. அதாவது பறவைகள் குளிர் காலத்தில் வெப்பமான இடங்களைத் தேடிச் செல்லும். ஆனால் செண்பகம் எந்தச் சூழலிலும் தான் வாழும் இடத்தை விட்டு வேறிடத்திற்குச் செல்வதில்லை. இது புழுபூச்சிகளையே பிடித்து உண்ணும். இப்பறவை யாருக்கும் எந்தத் தீங்கும் செய்வதில்லை. எந்தப் பறவைக்கும் இல்லாத தனிப் பெருமை தமிழரிடையே இப்பறவைக்கு உண்டு. செண்பகம் தமிழீழத்தின் தேசியப் பறவையாகும்.

வாசிப்போம்



ஆடும் பாலமும்

ஓர் ஊரின் நடுவே ஆறு ஒன்று இருந்தது. ஆற்றைக் கடப்பதற்கு மிக ஒடுக்கமான ஒரு மரப்பாலம் இருந்தது. அப்பாலத்தில் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே செல்லமுடியும். ஒருநாள் கறுப்பு ஆடு ஒன்றும் வெள்ளை ஆடு ஒன்றும் எதிரெதிரே வந்து கொண்டிருந்தன. இரண்டும் ஒன்றையொன்று சந்தித்தன. கறுப்பு ஆடு "நான்தான் முதலில் வந்தேன் நீ திரும்பிப் போ" என்றது. வெள்ளை ஆடு அதற்கு மறுத்தது. அதனால் இரண்டிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இரண்டும் கொம்பினால் முட்டிமோதின. அதனால் இரண்டு ஆடுகளும் ஆற்றினுள் விழுந்து இறந்து விட்டன. பின்னர் ஒருநாள் இரண்டு ஆடுகள் பாலத்தில் எதிரெதிரே வந்து கொண்டிருந்தன. இரண்டும் சந்தித்தன. எப்படிப் பாலத்தைக் கடப்பது என்று நினைத்தன. உடனே ஓர் ஆடு படுத்துக் கொண்டது. தன்னைக் கடந்து போகும்படி மற்றைய ஆட்டிடம் கூறியது. அவ்வாறே ஆடு கடந்து சென்றது. பின்னர் மற்றைய ஆடும் எழுந்து பாலத்தைக் கடந்து சென்றது. ஒன்றையொன்று விட்டுக் கொடுத்ததனால் இரண்டு ஆடுகளும் ஆற்றைக் கடந்து சென்றன.


வாசிப்போம்



யாழ்ப்பாணம்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். இது ஒரு குடாப் பகுதியாகும். இங்கு தமிழர் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் கடற்றொழிலிலும் உழவுத் தொழிலிலும் சிறந்து விளங்குகின்றனர். வரலாற்றுப் புகழ் பெற்ற ஐந்து ஈச்சுரங்களில் ஒன்றான நகுலேச்சுரம் இங்குள்ள கீரிமலை என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது சுற்றுலாப் பகுதியாக விளங்குகின்றது. காங்கேசன்துறையில் சீமெந்து ஆலையும் துறைமுகமும் உள்ளன. யாழ்குடா காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது. தி.பி. 10ஆம் நூற்றாண்டில் பார்வையற்ற வீரராகவன் இனிமையாக யாழ் பாடினான். அதைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் ஒருவனால் இந்நிலம் பரிசளிக்கப்பட்டது. யாழ்பாடிப் பாணன் பரிசு பெற்றதனால் இந்நிலம் யாழ்ப்பாணம் என அழைக்கப்பட்டது எனக் கூறுவர்.

வாசிப்போம்



உழவர் திருநாள்

தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் சிறந்த நாளாகும். இது ஆண்டு தோறும் தைமுதலாம் நாள் கொண்டாடப்படும். இந்நாள் தமிழருடைய புத்தாண்டு நாளுமாகும். தைப்பொங்கலன்று அதிகாலையில் எழுந்து நீராடிப் புத்தாடை அணிவர். முற்றத்தில் கோலமிடுவர். புதுப்பானையில் புத்தரிசியை இட்டுப் பொங்கல் பொங்குவர். அன்று வடை, மோதகம், போன்ற பண்ணியங்களையும் செய்வர். பொங்கலுடன் பண்ணியங்களும் முக்கனிகளும் சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர். பின்னர் பொங்கலை அயலவருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர். தைப்பொங்கலன்று தமிழருடைய விருந்தோம்பற் பண்பு சிறந்து விளங்குகின்றது.


வாசிப்போம்



உறவுகளைப் பேணுவோம்

உறவுகள் என்றால் நாம் எமது குடும்பத்தில் உள்ளவர்களை மட்டும் நினைக்கின்றோம். அது தவறானதாகும். எமது வாழ்வில் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவர்களும் எமது உறவுகளே. எடுத்துக்காட்டாக எமது ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுடன் நாங்கள் பிரிக்க முடியாத உறவைப் பேணுகின்றோம். என்றுமே அந்த உறவை எம்மால் மறக்க முடியாது. அவர்களுடன் நாங்கள் அன்புடனும் மதிப்புடனும் பழக வேண்டும். எமது வகுப்பில் படிக்கும் மாணவருடன் நாம் உடன் பிறந்தவர் போல் விட்டுக் கொடுத்துப் பழகவேண்டும். ஒருவருடன் ஒருவர் சண்டைபிடிக்கக் கூடாது. எமது அயலவருடனும் நாம் நல்லுறவைப் பேண வேண்டும். அவர்களைக் காணும் பொழுது நாம் எப்பொழுதும் வணக்கம் கூற வேண்டும். எமக்கு ஏதும் துன்பம் என்றால் அவர்கள் தான் ஓடி வருவார்கள். நட்பும் ஒரு உண்மை உறவாகும். இவ்வாறு உறவுகள் பலவகைப்படும். அன்பாகப் பழகி அவ்வுறவுகளைப் பேணுவோம்.

வாசிப்போம்



ஏர்

மாந்தர் நிலத்தைக் கிளறுவதற்கு முதலில் கூர்மையான கற்கள், விலங்குகளின் எலும்புகள் போன்றனவற்றைப் பயன்படுத்தினர். பின்னர் மரங்களிலிருந்து கிடைத்த வளைந்த அமைப்புடைய கூர்மையான மரக்கட்டையைப் பயன்படுத்தினர். இரும்பைக் கண்டறிந்த பின் மரக்கட்டையுடன் இரும்பைப் பொருத்தி நிலத்தை ஆழமாகவும் விரைவாகவும் உழவு செய்யக் கற்றுக் கொண்டான். உழவு செய்வது மிக எளிதாக இருந்ததை உணர்ந்தான். மாந்தனால் வடிவமைக்கப்பட்ட முதல் உழவுத் தொழிற்கருவி ஏர் ஆகும். ஏர் கலப்பை என்றும் அழைக்கப்பட்டது. இது உணவு உற்பத்தியைத் தொடங்க உதவியது. தற்போது புதிய கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் உழவுத் தொழில் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது.

வாசிப்போம்



தேசியக்கொடி

ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியக்கொடி உண்டு. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும். இக்கொடியில் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்கள் உள்ளன. இதில் புலி பொறிக்கப்பட்டிருக்கும். தேசியக்கொடி முதன் முதலாக 1990 ஆம் ஆண்டு ஏற்றிவைக்கப்பட்டது. தேசியக்கொடியை வணங்குவது தாய்நாட்டை வணங்குவதற்கு ஒப்பாகும். தேசியக்கொடி ஏற்றும் போது நாம் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும். கொடியேற்றும் போது கொடி வணக்கப் பாடல் பாடப்படும். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர் தேசிய நிகழ்வுகளின் போது தமது தேசியக்கொடியை ஏற்றி வணக்கம் செய்கின்றனர்.

வாசிப்போம்



மோனலிசா

ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிப்பவை: சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுபவை;மனதிற்கு அமைதியைத் தருபவை. உலக ஓவியர்களால் வரையப்பட்ட மனதைக் கவரும் ஓவியங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒரு சில உலகப் புகழ் பெற்றுள்ளன. அவ்வாறு உலகப் புகழ் பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது 'மோனலிசா' ஓவியமாகும். உலகில் வேறு எந்த உருவப் படத்திலும் இல்லாத அழகு இவ் ஓவியத்தில் ஒளிர்கிறது. ஓவியனின் திறமையை மோனலிசா ஓவியத்தில் காணமுடிகிறது. இதில் வண்ணங்களைக் கையாண்டிருக்கும் வகை மிகவும் வியக்கத்தக்கது. தூரிகையைப் பயன்படுத்தி இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளதா என ஐயப்பட வைக்கிறது. இவ் வியக்கத்தக்க ஓவியத்தை வரைந்தவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த லியனா-டோ-டாவின்சி. இவர் பல ஓவியங்களை வரைந்துள்ளார். அவற்றுள் உலகப் புகழ் பெற்றது மோனலிசா ஓவியமாகும். புன்னகை பூத்த ஒரு பெண்ணின் ஓவியமே அது. இவ் ஓவியம் பாரிசு நகரின் 'லூவர்' என்னும் இடத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்படடுள்ளது.

வாசிப்போம்



உண்மை

உண்மை பேசுதல் உயர்ந்த பண்பாகும். உண்மை உயர்வு தரும். நாம் என்றும் உண்மை பேச வேண்டும். பொய் பேசுதல் பெரும் தீங்காகும். "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்று பாரதியார் பாடியுள்ளார். உண்மை பேசுவதால் உயர்வு அடையலாம். உண்மை என்பதற்கு வாய்மை, மெய் எனப் பல பொருள் கூறுவர். உண்மை சொல்லிக் கெட்டார் எவருமில்லை. மனதில் பொய் இல்லாமல் நேர்மையோடு வாழும் ஒருவன் உலகத்துச் சான்றோர்களின் மனங்களில் எல்லாம் உயர்வாக மதித்துப் போற்றப்படுவான் என்பது வான்புகழ் கொண்ட வள்ளுவர் கூற்றாகும். நாமும் உண்மை பேசி உயர்வடைவோம்.


வாசிப்போம்



சின்னமகளின் சின்னக்கைகள்

சனிக்கிழமை யாழினிக்குப் பள்ளி விடுமுறை. அன்று யாழினி வீட்டிலேயே இருந்தாள். காலையிலேயே அவளது அப்பாவும் அம்மாவும் வேலைக்குச் சென்றுவிட்டனர். யாழினி சிறிது நேரம் தம்பியுடன் விளையாடினாள். பின்னர் சமையலறைக்குச் சென்று பார்த்தாள். அம்மா வேலையில் இருந்து களைப்புடன் வருவார் என நினைத்தாள். அம்மாவிற்கு உதவி செய்ய எண்ணினாள். சமையலறையையும் வீட்டையும் பெருக்கினாள். சமையற் கலங்களைக் கழுவி ஒழுங்காக அடுக்கி வைத்தாள். அம்மா களைப்புடன் வீட்டிற்குள் வந்தார். எல்லாம் ஒழுங்காக அடுக்கித் தூய்மையாக இருப்பதைப் பார்த்தார். தன் பத்து வயது அன்பு மகளின் வேலைதான் இது என்பதை அறிந்து மகளை அன்புடன் அணைத்து முத்தம் கொடுத்தார்.

வாசிப்போம்



எடிசன்

தோமசு அல்வா எடிசன் அமெரிக்காவில் உள்ள மிலான் நகரில் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தேழாம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதினோராம் நாள் பிறந்தார். இவர் பள்ளி செல்லும் காலங்களில் பள்ளியில் எந்நேரமும் குறும்புகள் செய்தபடியே இருப்பார். இதனால் இவர் பள்ளியில் தொடர்ந்து கல்வி கற்க முடியவில்லை. தாயாரின் உதவியுடன் வீட்டிலிருந்தே பாடங்களைக் கற்றார். எதிர்பாராத வகையில் இவரது குடும்பத்தில் வறுமை ஏற்பட்டது. இதன் காரணமாகத் தொடருந்து நிலையத்தில் செய்தித்தாள் விற்றார். தனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் படிப்பிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். இதன் விளைவாகத் தனது முப்பதாவது அகவையில் மின்குமிழைக் கண்டு பிடித்தார். இதற்காகப் பதினாறு மாதங்கள் ஓயாது பாடுபட்டார். 1882.09.04 அன்று நியூயோர்க் நகரத்தை மின்விளக்கொளியில் ஆழ்த்தினார். இதனால் இவர் புகழ் உலகெங்கும் பரவியது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு எடிசன் ஓர் எடுத்துக்காட்டு.




வாசிப்போம்

நல்ல நூல்களைக் கற்போம்

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

திருவள்ளுவரின் திருக்குறள் மாணவர்களுக்கு மட்டும் அல்ல எல்லா அகவையிலும் உள்ள மாந்தருக்கும் பொருந்தி நிற்கின்றது. ஒரு கேணியை அல்லது கிணற்றை எவ்வளவு ஆழமாகத் தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கு நீர் அதிகமாக ஊறும். அதுபோல் நாங்கள் எவ்வளவு அதிகமாக நல்ல நூல்களைத் தேடிக் கற்கின்றோமோ அந்த அளவிற்கு அறிவும் பெருகும். அதாவது அறிவு கூடிக் கொண்டே இருக்கும். வள்ளுவர் இதனையே இரண்டே வரிகளில் மிக அழகாகக் கல்வி என்னும் அதிகாரத்தில் கூறி உள்ளார். எனவே மாணவர்களாகிய நாம் நல்ல நூல்களைத் தேடிக் கற்போம். எமது அறிவை வளர்ப்போம்.

வாசிப்போம்



வண்ணத்துப் பூச்சி

வளவன் வீட்டில் ஒரு பூச்செடி வளர்த்தான். அந்தச் செடியின் இலையில் ஒரு புழு இருந்தது. அந்தப் புழு மெதுவாக ஊர்ந்து போகும். ஒவ்வொரு நாளும் அவன் அதைப் பார்ப்பான். ஒரு நாள் அந்தப் புழுவைக் காணவில்லை. வளவன் செடியில் அதைத் தேடினான். ஓர் இலையில் பழுப்பு நிறத்தில் ஒரு கூடு இருந்ததைக் கண்டான். அவன் அதை வியப்போடு பார்த்தான். சில நாட்களின் பின் அந்தக் கூடு உடைந்து ஒரு பூச்சி வெளியே வந்தது. அது ஓர் அழகான வண்ணத்துப்பூச்சி. அதைப் பார்த்து வளவன் மகிழ்ந்தான். தான் கண்ட அந்தப் புழுவே பின்னர் வண்ணத்துப் பூச்சியாக உரு மாறியது என்பதை உணர்ந்து கொண்டான்.

வாசிப்போம்



ஒட்டகச்சிவிங்கி

உலகில் உள்ள விலங்குகளில் மிகவும் உயரமானது ஒட்டகச்சிவிங்கி. இது இருபது அடி உயரம் வரை வளரும். ஒட்டகம் போன்று நீண்ட உடலமைப்பும் சிறுத்தைப்புலி போல் புள்ளிகளும் இதற்கு இருக்கிறது. இது ஆபிரிக்கக் காடுகளில் ஏராளமாகக் காணப்படுகிறது. வரண்ட வெப்பமான இடங்களில் இது வாழும். இதன் கண்கள் மிகவும் அழகாகவும் கூர்மையாகவும் இருக்கும். இது கத்துவதில்லை. ஏனெனில் இதற்குக் குரல் இல்லை. மிக மெல்லிய ஒலியும் இதற்குத் தெளிவாகக் கேட்கும். நீர் குடிக்காமலே பல நாட்கள் இது உயிர் வாழும். ஒட்டகச்சிவிங்கி இலை தழைகளையே உண்ணும். இது மிகவும் அமைதியானது.

வாசிப்போம்



நல்ல மனம்

தேனிலாவும் மங்கையும் நான்காம் வகுப்பில் படிக்கின்றனர். இருவரும் பள்ளி இடைவேளையில் ஒன்றாகவே உணவு உண்பார்கள். அன்று ஒரு திங்கட்கிழமை. பள்ளி இடைவேளையின் போது தேனிலா உணவு உண்ண மங்கையைக் கூப்பிட்டாள். மங்கை தான் உணவு கொண்டு வரவில்லை எனக் கூறினாள். ஏன் உணவு கொண்டு வரவில்லை எனத் தேனிலா கேட்டாள். அம்மாவிற்குக் கையில் அடிபட்டுவிட்டது. அம்மாவால் சமைக்க முடியவில்லை என்றாள் மங்கை. உடனே தேனிலா தான் கொண்டு வந்த உணவை மங்கையுடன் சேர்ந்து உண்டாள். நான் நாளையில் இருந்து உனக்கும் உணவு கொண்டு வருகின்றேன் என மங்கைக்குத் தேனிலா கூறினாள்.

வாசிப்போம்



மான்குட்டி

ஒரு காட்டில் மான்கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. அக்கூட்டத்தில் ஒரு தாயும் குட்டியும் இருந்தன. அந்த மான்குட்டி மற்றக்குட்டிகளோடு சேராது இலைதழைகளைத் தின்று விட்டு எப்போதும் படுத்தே இருக்கும். அதனால் அது நன்கு கொழுத்திருந்தது. ஒருநாள் அந்த மான்குட்டி இலைதழைகளைத் தின்றுவிட்டு தனியாக அங்கேயே படுத்துக் கொண்டது. அப்போது அங்கே ஒரு நரி வந்தது. மான்குட்டியைப் பிடித்துத் தின்ன அருகில் சென்றது. மான்குட்டி எழுந்து ஓடத்தொடங்கியது. ஆனால் மான்குட்டியால் விரைவாக ஓட முடியவில்லை. நல்ல வேளை அந்தக் குட்டியின் தாய் அங்கே வந்தது. அது நரியை முட்டித் துரத்தியது. மான்குட்டி தப்பியது. தாய் தன் குட்டியைப் பார்த்து நீ சோம்பலாக இருக்கக் கூடாது, ஓடியாடித் திரி. அப்போதுதான் நீ கொடிய விலங்குகளிடமிருந்து தப்பி வாழ முடியும் என்று கூறியது.

வாசிப்போம்



நிலைத்திணைகள்

மண்ணின் மேற்பரப்பில் உள்ள மரம், செடி, கொடி என்பவற்றை நாங்கள் நிலைத்திணைகள் என்கின்றோம். நாம் உண்ணும் கூலவகைகளான நெல், சோளம், பயறு போன்றவற்றையும் காய்கறிவகைகள், கிழங்குவகைகள், கீரைவகைகள், பழவகைகள் போன்றவற்றையும் இந் நிலைத்திணைகளில் இருந்தே பெறுகின்றோம். கத்தரி, பூசினி, வெண்டை, பாகல், புடோல் போன்றன காய்கறிகளாகும். மரவள்ளி, வற்றாளை, உருளைக்கிழங்கு, கரணைக்கிழங்கு போன்றன கிழங்கு வகைகளாகும். மா, பலா, வாழை, கொய்யா, தோடை, விளா போன்றன பழவகைகள் ஆகும். இந்நிலைத்திணைகள் விளைவதற்கு நன்னீர் வேண்டும். இந்நீர் கிணறு, குளம், ஆறு என்பனவற்றில் இருந்து பெறப்படுகிறது.

வாசிப்போம்



வீரவணக்கம்


பழந்தமிழரின் நம்பிக்கைகள் அனைத்தும் ஏதேனும் ஒரு நல்ல நோக்கத்தில் அமைந்திருக்கும். அவர்களின் வழிபாட்டு முறைகளுள் வீரவணக்கமும் ஒன்று. வீர வணக்கமானது தமிழரிடையே திடீரெனத் தோன்றவில்லை. அது நெடுங்காலம் வழக்கிலிருந்தே வந்த ஒன்றாகும். போரில் விழுப்புண் பட்டு நெஞ்சில் வேல்பாய்ந்து வீழ்ந்து இறந்த வீரர்களைத் தமிழர் கடவுளாகப் போற்றினர். அவர்களின் உருவத்தைக் கல்லில் செதுக்கி நாளும் வழிபட்டனர். பண்டைக் காலத்தில் இவ்வீர வழிபாடே மேலோங்கியிருந்தது. இன்றும் தமிழரிடையே வீரவழிபாடு தொடர்கின்றது. இதுவே மாவீரர்நாளாகும்.

வாசிப்போம்



திருக்குறள்

அறநூல்களில் மிகவும் சிறந்தது திருக்குறள். இது திருவள்ளுவரால் எழுதப்பட்டது. ஒவ்வொரு திருக்குறளும் இரண்டு அடிகளைக் கொண்டது. திருக்குறளில் 1330 குறட்கள் உள்ளன. இது 133 அதிகாரங்களைக் கொண்டது. இது மாந்தன் எப்படி வாழவேண்டுமென்று விரிவாகக் கூறுகின்றது. இந்நூலில் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்கள் இருக்கின்றன. திருக்குறளைப் பொதுமறை என்றும் அழைப்பர். இது அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களையுடையது. இதனால் திருக்குறளை முப்பால் என்றும் அழைப்பர். நாம் அனைவரும் இந்நூலைக் கற்றுப் பயன் பெறுவோம்.


வளர் தமிழ்
வாசிப்போம்
வளர் தமிழ்
வாசிப்போம்
வளர் தமிழ்
12
தமிழ்மொழி
கட்புலவளநூல்
சிலப்பதிகாரம்
இலக்கிய நயம்
பட்டினப்பாலை
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை